மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல் வரிவஜா செய்தல், ஒத்தி வைத்தல் இவற்றை மாவட்ட அதிகாரிகள் அனுப்புகிற பரிந்துரைகள், வருவாய்த்துறை வாரியத்தின் பரிசீலனை ஆகிய இரண்டின் அடிப்படையில், எங்கெங்கு வறண்ட பகுதிகள், அங்கு என்னென்ன மாதிரியான அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதை அரசாங்கம் மேற்கொள்ளும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே,.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநெல்வேலி மாவட்டத்தைப் பற்றி முந்தாநாள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு விளக்கம் கேட்கப் போகிறீர்கள். சரி கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கோயில்பட்டி தாலுக்கா மிகவும் வறண்ட பிரதேசம். தொடர்ந்து இரண்டு, மூன்று ஆண்டுகளாகப் பருவ மழை தவறியதைப்போல இந்த ஆண்டும் பருவ மழை தவறியதால் அங்கு கிராமங்களில் குடிதண்ணீர்கூட இல்லாமல், ஆடுமாடுகளைக் கூடப் பாதுகாக்க முடியாமல், அங்கே அவர்கள் தங்க முடியுமா என்ற நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மேலரசம்பட்டி போன்ற ஊர்களில் குடி தண்ணீர் கிடையாது. விவசாயம் செய்வதற்கான பாசன வசதியும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்கின்ற நேரத்தில் கொடுத்திருக்கின்ற ஸ்டேட்மெண்ட் சம்பந்தமாகத்தான் விளக்கம் கேட்கலாம். புதிய கருத்துக்களுக்குக் கேட்கக் கூடாது.

திரு. சோ. அழகர்சாமி : குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வாங்கிய கடன் வசூலை நிறுத்தி வைத்துத் தீர்வைகளை வஜா செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதற்கு 8½ இலட்சம் ரூபாய் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினை மற்றவை எல்லாம் அடங்குகின்றன. இன்னும் மேற்கொண்டும் வரிகளைத் தள்ளி வைப்பதா என்பதெல்லாம் அந்தந்த நேரத்தில் அந்தந்த ஊரின் நிலைமைகளைக் கவனித்து, அவர்கள் அனுப்பும் பரிந்துரைகளின்மேல் செய்யப்பட்டு வருகின்றன. தேவையில்லாத இடத்திலே எல்லோரும் சொல்கிறார்கள் என்பதால் செய்துவிட்டு, நாளைக்கு உறுப்பினர்களேகூட ஏன் வரி வசூல் செய்யவில்லை என்று கேட்கக் கூடும். 8½ இலட்சம் ரூபாய் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் என்ன செய்யலாம் என்பதும் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

(ஆ) பரிசுச் சீட்டுகள் நடத்துவதற்குக் காவல்துறை ஆணையர் விதித்துள்ள தடையும் அதன் விளைவுகளும்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு 41-வது விதியின்கீழ் ஒரு விஷயத்தைக் கொண்டுவருவார்கள்.

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance, viz.,

"the sudden order by the Commissioner of Police banning all gift schemes run by a number of shops in the City of Madras which has suddenly put an end to the trading activities of a number of shops and also the need to lift the ban forthwith and allow the shops to carry on the gift schemes at least till they complete the existing contract between them and the customers."

*** மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மத்திய அரசு நடத்தி வரும் பரிசுச் சீட்டோ அல்லது மாநில அரசின் அனுமதி பெற்ற பரிசுச் சீட்டோ அல்லாத பிற பரிசுச் சீட்டு ஒன்றை நடத்துவதற்காக ஓர் அலுவலகம் அல்லது இடத்தைப் பேணி வருபவர் யாராயிருப்பினும் அவருக்கு ஆறு திங்கள் கால அளவிற்குச் சிறைத் தண்டனையோ, அபராதத் தண்டனையோ அல்லது இவ்விரு தண்டனைகளுமோ விதிக்கப்படுமென இந்தியத் தண்டனைச் சட்டக் கோவையின் 294-எ பிரிவு வகை செய்கின்றது. அத்தகைய பரிசுச்சீட்டுத் திட்டத்தில் ஒரு சீட்டு, சீட்டுத் தொகுதி, எண் அல்லது இலக்கத்தைக் குலுக்கியெடுப்பதற்குத் தொடர்பான அல்லது அதற்குப் பொருந்தும் ஒரு நிகழ்ச்சியில் அல்லது நேர்வில் ஒருவர் பயன் பெறுவதற்காக ஒரு தொகையைச் செலுத்துவதாய் அல்லது பொருள்களை ஒப்படைப்பதாய் அல்லது ஒரு செயலைச் செய்யப் போவதாய் அல்லது செய்யாமலிருக்கப் போவதாய் குறிப்பிடுகிற ஒரு செயற் குறிப்பினை யார் வெளியிட்டாலும் அவருக்கு ஆயிரம் ரூபாய் வரையில் அபராத தண்டனை விதிக்கப்படுமென்றும் அப் பிரிவில் விதித் துறை உள்ளது. சட்டப்படிக்கான இந்த நிலைமை வணிகர்களில் சிலருக்குத் தெரியாமலிருக்கலாமென்பதால், சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் 1968 டிசம்பர் 20-ம் தேதியன்று நடந்த தமது வாராந்திரப் பத்திரிகை நிருபர் கூட்டத்தில் சட்டத்தில் கண்டுள்ள இந்த நிலையை விளக்கிக் கூறினர்.

பரிசுத் திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவது இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் 294-எ பிரிவின் விதித் துறைகளுக்கு முரணானதாகும்; அது முறையானதுமல்ல. வணிகர்கள் தங்களுக்கும் வாடிக்கைக்காரர்களுக்கும் இடையேயுள்ள ஒப்பந்தங்களை முடிவு செய்யும் வரை இப் பரிசுத் திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்குவதுகுறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

Dr. H. V. HANDE : From the statement of the Hon. Minister it is not clear whether these firms can run these lottery schemes now and whether if they run them now, it is against the rules and whether the Government is going to take any action against them for running these schemes after the issue of the order by the Commissioner of Police. I understand that this order was issued without the knowledge of Government. I talked with the Home Secretary and I think this order has been issued without the knowledge of Government. I want to know whether it was issued when the Home Minister, Thiru Anna was not doing well. I request the Hon. Minister to give the necessary clarification.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, முன்னரே கூறியபடி வாராந்திரக் கூட்டத்திலே கமிஷனர் அவர்கள் அறிக்கை அளித்திருக்கிருர்கள். அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஐ. பி. சி. பிரிவின்படி குற்றம் என்ற கருத்துச் சொல்லப்பட்டது, லீகல் ஒபினியனில் இதை "ஆதரைஸ்" செய்யலாம், அதிகாரம் இருக்கிறது என்ற கருத்துச் சொல்லப்பட்டது. வாடிக்கைக்காரர்களுக்கும் வணிகர்களுக்கும் உள்ள ஒப்பந்தம் முடியும்வரை அவர்கள் தொடர்ந்து நடத்தச் சட்டத்திலே அதிகாரம் இருக்கிறதா, அனுமதி கொடுக்கலாமா என்பது பற்றி இப்போழுது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1969-70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்.

3. தன்னிலை விளக்கம்

எதிர்க்கட்சித் தலைவர்பற்றிக் கூட்டுறவுத் துறை அமைச்சரின் திருத்த விளக்க உரை குறித்து திரு. பி. ஜி. கருத்திருமன் அளித்த விளக்கம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார், அதற்குப் பர்மிஷன் கொடுக்க வேண்டும். கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று நான் சட்ட சபைக்கு வர இயலாத காரணத்தினுல்,